**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண்.52/2024**

இந்நீதிமன்ற எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு நவம்பர் மாதம் 04 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : விஜய் சாமிநாதன் | மதம் | : இந்து |
| த/பெ | : ஜெயம் | ஜாதி | : -- |
| வயது | : 37 | கிராமம் | : காடப்பாக்கம் |
| தொழில் : | தனியார் நிறுவனம் | வட்டம் | : சோழிங்கநல்லூர் |

**04.11.2025**
**வா.சா. 1 ன் முதல் விசாரணை**

1. நான் இவ்வழக்கில் 1ம் வாதி ஆவேன். வாதி தரப்பு 1ம் சாட்சியாக சாட்சியம் அளிக்கிறேன். என் தரப்பில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். எனது பிரமாண வாக்குமூலத்தை நான் சொல்லித்தான் என்னுடைய வழக்கறிஞர் தயார் செய்தார். அதில் உள்ள விவரங்கள் எனக்கு நன்கு தெரியும். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். 18.12.2015ம் தேதியிட்டு என் தாயார் மீனாராணி ஜெயம் என்பவருக்கு ரமேஷ் எழுதி கொடுத்த கிரைய ஆவணம் இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். **(கிரைய ஆவணம் வா.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 27.10.2014ம் தேதியிட்டு என் தாயார் மீனாராணி ஜெயம் என்பவருக்கு ஶ்ரீராமலு எழுதி கொடுத்த கிரைய ஆவணம் இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். **(கிரைய ஆவணம் வா.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

2. 03.11.2014ம் தேதியிட்டு என் தாயார் மீனாராணி ஜெயம் என்பவருக்கு ஜெயபால் வகையறா எழுதி கொடுத்த கிரைய ஆவணம் இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். **(கிரைய ஆவணம் வா.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பட்டா எண்.1145ல் என் தாயார் மீனாராணி பெயரில் உள்ள பட்டா இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். **(பட்டா வா.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பட்டா எண்.1246ல் என் தாயார் மீனாராணி பெயரில் உள்ள பட்டா இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். **(பட்டா வா.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 05.02.2016ம் தேதியிட்டு 1ம்

பிரதிவாதி என் அப்பா ஜெயம் என்பவருக்கு எழுதி கொடுத்த கிரைய ஆவணம் இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். **(கிரைய ஆவணம் வா.சா.ஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 18.03.2016ம் தேதியிட்டு முரளி என் அப்பா ஜெயம் என்பவருக்கு எழுதி கொடுத்த கிரைய ஆவணம் இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். **(கிரைய ஆவணம் வா.சா.ஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

3. 18.03.2016ம் தேதியிட்டு கிருஷ்ணாராவ் என் அப்பா ஜெயம் என்பவருக்கு எழுதி கொடுத்த கிரைய ஆவணம் இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். **(கிரைய ஆவணம் வா.சா.ஆ 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பட்டா எண்.1146ல் என் தகப்பனார் ஜெயம் பெயரில் உள்ள பட்டா இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். **(பட்டா வா.சா.ஆ 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பட்டா எண்.1247ல் என் தகப்பனார் ஜெயம் பெயரில் உள்ள பட்டா இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். **(பட்டா வா.சா.ஆ 10 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 20.05.2016ம் தேதியிட்டு எனக்கு கிருஷ்ணாராவ் எழுதி கொடுத்த கிரைய ஆவணம் இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். **(கிரைய ஆவணம் வா.சா.ஆ 11 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பட்டா எண்.1144ல் என் பெயரில் உள்ள பட்டா இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். **(பட்டா வா.சா.ஆ 12 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

(முதல் விசாரணை தொடர்ச்சி ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)